# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சொல்லின் இறுதியில் வராத மெய்யெழுத்துகள்

அ) இடையினஎழுத்துகள் ☐ ஆ) வல்லினஎழுத்துகள் ☐

இ) மெல்லினஎழுத்துகள் ☐ ஈ) நெட்டெழுத்துகள் ☐

2. மாவும் புள்ளும் ஐயறிவினவே. இங்கு மா என்ற சொல் குறிப்பது

அ) பறவையை ☐ ஆ) உணவை ☐

இ) நீரை ☐ ஈ) விலங்கை ☐

3. சுட்டுப் பொருளை உணர்த்தும் சொல்

அ) என்ன ☐ ஆ) ஏது ☐

இ) அது ☐ ஈ) ஏன் ☐

4. உலகம் உருண்டை என்பதை முதலில் கூறியவர்

அ) வள்ளுவர் ☐ ஆ) கம்பர் ☐

இ) இரணியன் ☐ ஈ) ஔவையார் ☐

5. நாம் கூறப்போகும் பொருள் ஒன்றைச் சிறப்பிக்கும் பொருட்டு அதன் இயல்பை உயர்த்திக் கூறுவது

அ) உயர்வுநவிற்சியணி ☐ ஆ) உவமைஅணி ☐

இ) உருவகஅணி ☐ ஈ) சொல்லணி ☐

6. சரசுவதி என்ற சொல்லின் தூய தமிழ்ச்சொல்

அ) கலைமகள் ☐ ஆ) மலைமகள் ☐

இ) திருமகள் ☐ ஈ) துர்க்கை ☐

7. பூங்காவில் குயில்கள் கூவின. இச்சொல்லியம்

அ) 3 ஆம் வேற்றுமை ☐ ஆ) 5 ஆம் வேற்றுமை ☐

இ) 7 ஆம் வேற்றுமை ☐ ஈ ) 6 ஆம் வேற்றுமை ☐

8. தமிழரது பண்பாடுகளிலும் பழக்கவழக்கங்களிலும் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள்

அ) சிங்களவர் ☐ ஆ) இந்தியர் ☐

இ) ஆங்கிலேயர் ☐ ஈ ) ஆரியர் ☐

9. ஆண்டான் என்பதன் பகுதி

அ) ஆண் ☐ ஆ) ஆள் ☐

இ) ட் ☐ ஈ ) ஆன் ☐

10. நாங்கள் கடுமையாக அம்பு எய்வோம் என்று அறந்தவறாது அறிவிக்கின்ற கொள்கை

அ) கொடை ☐ ஆ) கோழை ☐

இ) வீரம் ☐ ஈ ) தோல்வி ☐

11. புளிக்காய் என்பது

அ) அன்மொழித்தொகை ☐ ஆ) பண்புத்தொகை ☐

இ) உம்மைத்தொகை ☐ ஈ ) உவமைத்தொகை ☐

12. மண்முழா மறப்ப பண் யாழ் மறப்ப என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ) புறநானூறு ☐ ஆ) அகநானூறு ☐

இ) பரிபாடல் ☐ ஈ ) குறுந்தொகை ☐

13. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபுகள்

அ) போல,ஒப்ப ☐ ஆ) ஐ,ஆல் ☐

இ) அத்து,அற்று ☐ ஈ ) த்,ட் ☐

14. புன்கண் என்ற சொல்லின் பொருள்

அ) மகிழ்ச்சி ☐ ஆ) களிப்பு ☐

இ) துன்பம் ☐ ஈ ) இன்பம் ☐

15. அஃறிணைக்குரிய பால்கள்

அ) ஆண்பால்,ஒன்றன்பால் ☐ ஆ) பெண்பால்,பலர்பால் ☐

இ) ஒன்றன்பால்,பலவின்பால் ☐ ஈ ) பலவின்பால்,பெண்பால் ☐

16. தலையலங்கானத்தில் வெற்றி பெற்ற வீரன்

அ) சேரலாதன் ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐

இ) இரும்பொறை ☐ ஈ ) செங்குட்டுவன் ☐

17. இலக்கணப் போலிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நிலம் ☐ ஆ) ஞாயிறு ☐

இ) நீர் ☐ ஈ ) புறநகர் ☐

18. கள்ளிச் செடி அதிகமாக வளரும் நிலம்

அ) பாலை ☐ ஆ) மருதம் ☐

இ) நெய்தல் ☐ ஈ ) குறிஞ்சி ☐

19. செய் என்ற வினையடியைச் செயப்பாட்டுவினையாக மாற்றினால்

அ) செய்தான் ☐ ஆ) செய்யப்பட்டது ☐

இ) செய்தல் ☐ ஈ ) செய்த ☐

20. க,இய என்பவை

அ) பலர்பால் விகுதிகள் ☐ ஆ) ஒன்றன்பால் விகுதிகள் ☐

இ) ஆண்பால் விகுதிகள் ☐ ஈ ) வியங்கோள் விகுதிகள் ☐

21. இரண்டு மாத்திரையைக் குறிக்கும் எழுத்து

அ) இ ☐ ஆ) ஒ ☐

இ) ப் ☐ ஈ ) மெ ☐

22. வணக்கம் கூறுதல் தமிழர் பண்பாடுகளில் ஒன்று இதில் இடம்பெற்றிருக்கும் தொழிற்பெயர்

அ) தமிழர் ☐ ஆ) பண்பாடு ☐

இ) கூறுதல் ☐ ஈ ) ஒன்று ☐

23. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் இடம்பெறும் குறியீடு

அ) அரைப்புள்ளி ☐ ஆ) காற்புள்ளி ☐

இ) முற்றுப்புள்ளி ☐ ஈ ) முக்காற்புள்ளி ☐

24. அவன் தவப்பெருஞ்செயலால் உயிர்பிழைத்தான். இதில் தவ என்பது

அ) பெயர்ச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) உரிச்சொல் ☐ ஈ ) வினைச்சொல் ☐

25. தன்மை வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நடித்தேன் ☐ ஆ) நடித்தான் ☐

இ) நடித்தாள் ☐ ஈ) நடித்தீர்கள் ☐

26. உயிர்முன் உயிர் புணர்தலுக்கு எடுத்துக்காட்டு.

அ) கிளிச்சிறகு ☐ ஆ) திருவடி ☐

இ) பத்துப்பாட்டு ☐ ஈ) தமிழ்மொழி ☐

27. ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்த நூற்றாண்டு

அ) 15 ஆம் ☐ ஆ) 3 ஆம் ☐

இ) 9 ஆம் ☐ ஈ) 12 ஆம் ☐

28. ஐந்திலக்கணம்

அ) மாலை,யாமம்,வைகறை,விடியல்,நண்பகல் ☐

ஆ) எழுத்து,சொல்,பொருள்,யாப்பு,அணி ☐

இ) சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம் ☐

ஈ) கைப்பு,புளிப்பு,உவர்ப்பு,தித்திப்பு,கார்ப்பு ☐

29. நெடியோனால் கடலாடுவிழா ____________ எடுக்கப்பட்டது.

அ) மதிக்காக ☐ ஆ) பரிதிக்காக ☐

இ) கடலுக்காக ☐ ஈ) காற்றுக்காக ☐

30. வாரணன் அழகான வள்ளுவர் சிலையைச் செதுக்கினான். இதில் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) வாரணன் ☐ ஆ) செதுக்கினான் ☐

இ) அழகான ☐ ஈ) சிலை ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். விருந்தினர் யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு வரவேற்று உணவளித்து வழியனுப்பும் வாழ்வியலைக் கொண்டது தமிழரின் பண்பாடு. காலம் காலமாக விருந்தோம்பற் பண்பாட்டைக் கட்டிக்காத்து வருவது தமிழரின் தனிச் சிறப்பு. இதிலும் ஒரு படி மேலே சென்று விருந்தோம்பல் குடும்பத் தலைவியின் கடமைகளில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. விருந்தோம்பலை இல்லத்தரசியின் கடமையாக வேறு எந்த இனமும் நாடும் சுட்டிக்காட்ட வில்லை. இதனைத் தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்திருக்கின்றன. வாரி வழங்கும் வள்ளல்கள் வாழ்ந்த பரம்பரை நம் தமிழ்ப் பரம்பரை. கடையெழு வள்ளல்கள் வாழ்ந்த வரலாற்றைப் பதிவு செய்து பாதுகாத்து வருகின்றோம். தமிழரின் ஈகைப் பண்பாட்டிற்கு இணையாக நாம் எதையும் சொல்லிவிட முடியாது. மாந்தனுக்கு மாந்தன் மட்டும் உதவுவது ஈகை அல்ல. படர்ந்து செல்லும் செடிகொடிகளுக்கும் உதவி செய்து தமிழ்ப்பண்பாட்டை உலக அரங்கில் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்றது தமிழினம். குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை அளித்துச் சென்றான் பேகன். பற்றிப்படரக் கொம்பின்றிக் கிடந்த கொடிக்கு தான் வந்த தேரினை விட்டுச் சென்றவன் பாரி. இதே போல் நீண்ட நாள் உயிர்வாழும் நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்துச் சென்றான் அதியர்மான். அள்ளிஅள்ளிக் கொடுத்த ஈகை மனதினை இலக்கியங்கள் இன்றளவும் எடுத்துக்கூறி வருகின்றன. இந்த ஈகைக்கும் இலக்கணம் கூறியவர் வள்ளுவர்.

1. விருந்தோம்பல் யாருடைய கடமையாகக் கூறப்பட்டுள்ளது?

---

---

2. தமிழரின் தனிச்சிறப்பு எது?

---

---

3. வள்ளுவன் எதற்கு இலக்கணம் கூறியுள்ளார்?

---

---

4. தமிழரின் பண்பாடு எத்தகைய வாழ்வியலைக் கொண்டது?

---

---

5. இங்கு கூறப்பட்ட வள்ளல்கள் இருவரின் பெயர்களைத் தருக.

---

---

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உமக்குப் பிடித்த ஒரு குறளைத் தருக?

______________________________________________

______________________________________________

2. உடுத்தொகுதியில் உள்ள கோள்கள் எத்தனை?

______________________________________________

3. சிங்கள மயமாக்கப்பட்ட தமிழ் ஊர்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

4. முள்ளிவாய்க்கால் போர் நடைபெற்ற ஆண்டு எது?

______________________________________________

5. ஒவ்வொரு உயிரினங்களினதும் புலன்திறனை ஆறாக வகுத்துக் கூறியவர் யார்?

______________________________________________

6. முதற்பொருள் எனக் கூறப்படுபவை எவை?

______________________________________________

7. ஆரியர் ஆப்கானிய கைபர் கணவாயூடாக இமயத்தைக் கடந்து எப்பகுதியை அடைந்தனர்?

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1



2. கூடும் நட்பு நல்லதெனில்
   கூடிச் சேர்ந்து உயர்ந்திடலாம்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

2 ஆம் வேற்றுமைத்தொகை ______________________

திணைவழு ______________________

செய்வினை ______________________

2. ஆகுபெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

இலங்கை அழுதது. ______________________

மாரி பொழிந்தது. ______________________

பொரியல் உண்டான். ______________________

3. பிரித்து எழுதுக.

குயிலினம் ______________ முதன்மொழி ______________

வெண்டாமரை ______________ நாட்குறிப்பு ______________

நானூறு ______________ கன்மலை ______________

4. வினைமுற்றுகளை எச்சங்களாக மாற்றி எழுதுக.

| வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| ஓடியது | | |
| உழைத்தனர் | | |

5. எதிர்மறைச் சொல்லியங்கள் இரண்டு தருக.

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

ஓர் நாட்டு அரசினால் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் சொத்துகள் பொதுச்சொத்துகள் எனப்படும். பள்ளி, மருத்துவமனை, நூலகம், அஞ்சலகம், பூங்கா, பேருந்து, தொடருந்து போன்றனவற்றைப் பொதுச்சொத்துகள் என்கின்றோம். பொதுச்சொத்துகளை நாம் ஒவ்வொருவரும் நம் சொத்தாக எண்ணி அக்கறையுடன் பேணிப்பாதுகாக்க வேண்டும். ஆனால் இன்றோ பலர் பொதுச்சொத்துகளின் அருமை பெருமைகளை அறியாது அவற்றை உடைப்பது, களவெடுப்பது, எரிப்பது, அழிப்பது எனப் பலவகைகளிலும் பொதுச்சொத்துகளை அழித்து விடுகின்றனர். பொதுச்சொத்துகளை வீணடிப்பது குற்றமாகும். பொது இடங்களிலுள்ள மின்குமிழை உடைத்தல், பொது இடங்களை மாசுபடுத்துதல் போன்ற செயல்களை நாம் செய்யக் கூடாது. மக்கள் அரசுக்கு வழங்கும் வரிப்பணத்திலிருந்து பொதுச்சொத்துகள் மக்களின் நலனுக்காக அமைக்கப்படுகின்றன. அவற்றை நாம் வீணடிக்கும்போது மக்களுக்குப் பெரும் இடர்கள் ஏற்படும். பொதுச்சொத்து என்பது நமக்குத் தொடர்பில்லாதது என்ற அறியாமையே இச்சீர் கேடுகளுக்கு மூல காரணமாகும். பொதுச்சொத்து நம் சொத்தே அது அரசுச்சொத்து அல்ல என்ற உண்மையை நாம் உணர வேண்டும். பொதுச்சொத்தைப் போற்றலும் காத்தலும் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் நம் வளர்ச்சிக்கும் உதவுகின்றது என்பதைப் பெரியோர் சிறுவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். எனவே நாமும் பொதுச்சொத்தைப் பாதுகாத்து மற்றவர்களும் பயன் பெறச் செய்வோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 5

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

* தமிழர் வாழ்வியலில் ஆரியம் ஊடுருவல்

* பண்டைத்தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

* புலம்பெயர் நாட்டுக் கல்விமுறைகளும் வேலை வாய்ப்புகளும்

* புலம்பெயர் தேசத்தில் எமது முதியோர்
    - எமது முதியோரின் வாழ்க்கை முறை
    - அவர்களது விருப்புகள்
    - அவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள்
    - அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள்

புள்ளிகள் 20